DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 3 |
| | { Prosecution |
| | { |
| Name | : லோகநாதன் |
| Father's Name | : த/பெ. எஸ். பி. சிதம்பரம் |
| Taluk | : சங்ககிரி |
| Calling | :விவசாயம் |
| Religion | :இந்து |
| Age | :76 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.3ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

<u>**முதல் விசாரணை**</u>

நான் சங்ககிரி கிராமம், மேஸ்திரி காட்டில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். அ.சா.1 ன் வீட்டிலிருந்து சுமார் 40 அடி துாரத்தில் என் வீடும், தோட்டமும் உள்ளது. கடந்த 06.07.2020-ஆம் தேதியன்று காலை சுமார் 11 மணிக்கு. நான் என் வீட்டிலிருந்தேன். அப்போது அ.சா.1 ஐ, குமரசாமி "தேவடியா பையலே வாடா, வாடா" என்று சத்தம் போட்டது எனக்கு கேட்டது. அதனால் நான் என் வீட்டிற்கு பின்பக்கமாக சென்றேன். நான் போகும்போது அங்கு கை கலப்பு

நடந்தது. அப்போது அங்கு ஆஜர் எதிரிகளும், அ.சா.1 ம் இருந்தார்கள். 1-ஆம் எதிரி, அ.சா.1 ஐ ஓங்கி முதுகில் கையால் அடித்தார். 2- எதிரி, அ.சா.1 ன் கையை பின்பக்கமாக பிடித்துக்கொண்டார். உன்னை கொல்லாமல் விடமாட்டேடா என்று 2- ஆம் எதிரி சத்தம் போட்டார். அப்போது அ.சா. 1 கீழே விழந்துவிட்டார். அப்போது 3-ஆம் எதிரி இன்றோடு நீ செத்து ஒழிந்தாய்டா என்று சொல்லி சூரி கத்தியால் இடது தோள் பட்டை, வயிறு, வலது மார்பு ஆகிய இடங்களில் குத்தினார். அந்த கத்தி அவர் கொண்டு வந்திருந்தார். குத்தியதால் அ.சா.1 க்கு இரத்தம் வந்தது. உடனே பக்கத்து தோட்டத்திலிருந்து அ.சா. 2 அங்கு வந்துவிட்டார். நானும், அ.சா. 2 ம் எதிரிகளை விலக்கிவிட்டோம். சிறிது நேரத்தில் அ.சா.1 ன் மகன் வந்தபின்பு அ.சா.1 ஐ காரில் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நானும் பின்னால் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். சம்பவம் தொடர்பாக அ.சா. 1 போலீசில் மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- லோகநாதன்

ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி